<u>சாட்சியின் வாக்குமூலம்</u>

<u>திருவள்ளூர் மாவட்ட முதன்மை மற்றும் அமர்வு நீதிமன்றம்</u>

<u>அசல் வழக்கு எண்</u> : 113/2012

**PW1 – திரு. மூர்த்தி, த/பெ.காசிராஜன்**

**23.10.2024**

<u>சாட்சி சத்தியப்பிரமாணம் செய்விக்கப்பட்டு பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ந்து செய்ய அனுமதிக்கப்படுகிறார்</u>

**<u>பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

**<u>குறுக்கு விசாரணை தொடங்கிய நேரம் 15.00 மணி</u>**

காசிராஜன் டன்லப் நிறுவனத்தில் எப்போது வேலைக்கு சேர்ந்தார் என்று எனக்கு தெரியுமா என்றால் எனக்கு ஞாபகமில்லை. என் தந்தை டன்லப் நிறுவனத்தில் வேலைக்கு செல்வது எப்போது எனக்கு தெரியவந்தது என்றால் எனது 12 வயதில் தெரியவந்தது. என் தந்தை வருமானத்தில் கேசி கார்டனில் ஒரு சொத்து வாங்கினார் என்றால் அவருக்கு சம்பளம் குறைவு. நானும் என் தாயாரும் சேர்ந்து என் தந்தை பெயரில் வாங்கினோம். கேசி கார்டன் சொத்து எந்த ஆண்டு என் தந்தை வாங்கினார் என்றால் எனக்கு ஞாபகமில்லை. அந்த சொத்து நான் டன்லப் கம்பெனியில் வேலைக்கு செல்லும் முன் வாங்கியதா அல்லது அதற்கு பின் வாங்கியதா என்றால் நான் டன்லப் நிறுவனத்தில் வேலைக்கு செல்வதற்கு முன்னதாக வாங்கியது. அதற்கு முன்பாக நான் விறகு வியாபாரம் மற்றும் பால் வியாபாரம் செய்து வந்தேன். மேற்படி நான் வியாபாரம் செய்ததற்கு ஆதாரம் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. என் தந்தை டன்லப் நிறுவனத்தில் ஓய்வு பெறும்போது வாங்கிய சம்பளம் எவ்வளவு என்றால் சுமார் ரூ.4,000/- இருக்கும். கேட்டினமல்லி கிராமத்தில் உள்ள சொத்துக்களை நான் வாங்கியதாக கூறியுள்ளேன், அப்போது டன்லப் நிறுவனத்தில் நான் எவ்வளவு சம்பளம் வாங்கினேன் என்றால் எனக்கு ஞாபகமில்லை, சம்பள ரசீதுகளை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேன். வா.த.சா.ஆ. 13 ல் 29.10.1988 பில் ரசீதில் என் சம்பளம் எவ்வளவு குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் ரூ.280.15 ஆகும், அது வாரச்சம்பளம் ஆகும்.

வா.த.சா.ஆ.25 ல் டன்லப் நிறுவனத்தில் எனக்கு பணி நிரந்தரம் செய்யப்பட்ட பின் கொடுத்த 17.10.1992 தேதியிட்ட மாதசம்பளம் எவ்வளவு என்றால் ரூ.1244/- ஆகும். மேற்படி ஆவணத்தில் நான் பணியில் சேர்ந்த தேதி என்ன என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் 10.05.1991 ஆகும். என் தந்தையின் மாத சம்பள பட்டியலை தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் சொல்வதுபோல் என் தாயார் பேரில் கேட்டினமல்லி சொத்துக்கள் வாங்கப்பட்ட காலத்தில் நான் குடும்பத்திற்கு பணம் எதுவும் கொடுக்கவில்லை என்றால் சரியல்ல. என் தந்தை டன்லப் நிறுவனத்தில் எந்த பொறுப்பில் வேலை செய்தார் என்றால் fitter ஆக வேலை செய்தார். நான் டன்லப் நிறுவனத்தில் வேலை செய்யும்போது என் தந்தை பணி ஓய்வு பெற்றுவிட்டார் என்றால் சரிதான். என் தந்தை வருமானத்தில் தான் அவரது மனைவியின்பேரில் கேட்டினமல்லி கிராமத்தில் சொத்துக்கள் வாங்கினார் என்றால் சரியல்ல. எனக்கு எப்போது திருமணம் ஆனது என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை. எனக்கு 2 ஆண் பிள்ளைகள் உள்ளனர். என் மூத்த மகன் எந்த வருடம் பிறந்தார் என்றால் எனக்கு சரியாக ஞாபகமில்லை, தற்போது அவருக்கு 38 வயது இருக்கும். என் தந்தை கேசி கார்டன் சொத்தை எந்த வருடம் எனக்கு செட்டில்மெண்ட் செய்தார் என்றால் 2006ம் வருடம் என்று நினைக்கிறேன். என் தந்தை கேசி கார்டன் சொத்தை செட்டில்மெண்ட் செய்யும்போது நான் எங்கிருந்தேன் என்றால் அதே வீட்டில் தான் இருந்தேன். கேசி கார்டன் சொத்தை எனக்கு செட்டில்மெண்ட் செய்ததை ரத்து செய்த விவரம் எனக்கு எப்போது தெரியும் என்றால் 2007ம் வருடம் ரத்து செய்தது எனக்கு 2010ம் வருடம் தெரியவந்தது. என் தந்தை ரத்து செய்த ஆவணத்தை எதிர்த்து நான் வழக்கு தாக்கல் செய்தேனா என்றால் வழக்கு தாக்கல் செய்து எனக்கு சாதகமாக தீர்ப்பு வந்துள்ளது. அந்த வழக்கு தற்போது நீதிமன்றத்தில் நிலுவையில் உள்ளது என்றால் நிலுவையில் தான் உள்ளது. நான் சென்னை நகர 16வது உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 649/2008 என்று என் தந்தையை எதிர்த்து தாக்கல் செய்துள்ளேன் என்றால் நான் தாக்கல் செய்யவில்லை, அவர்கள் தான் போட்டார்கள். எனக்கு எழுதிக்கொடுத்த ஆவணத்தை ரத்து செய்த பிறகு சென்னை நகர 1வது உரிமையியல் நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண். 8012/2007 என் தந்தை தாக்கல் செய்தார் என்றால் அது வேறொரு வழக்கு ஆகும். மேற்படி வழக்கில் நான் வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தினேனா

என்றால் வழக்கறிஞர் வைத்து வழக்கு நடத்தினேன். அந்த வழக்கில் என் தந்தை என் மகனுக்கு எழுதிக்கொடுத்த செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்துவிட்டேன், ஆகவே என் மகன் என் சுவாதீனத்தில் இடையூறு செய்யக்கூடாது என்று கூறி வழக்கு தொடுத்தார் என்றால் என் தந்தை என்னிடம் என் பெயரில் தான் சொத்து உள்ளது, அந்த சொத்து எப்போது என்றாலும் உனக்கு தான் என்று கூறினார். அந்த வழக்கு 05.01.2008 அன்று என் தந்தையாருக்கு சாதகமாக தீர்ப்பு வழங்கப்பட்டது என்றால் என் தந்தை என்னிடம் என் பெயரில் தான் சொத்து உள்ளது, அந்த சொத்து எப்போது என்றாலும் உனக்கு தான் என்று கூறினார். அந்த தீர்ப்பின் மீது நான் மேல் முறையீடு செய்தேனா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும். என் தந்தையார் கேசி கார்டன் சொத்தை ரத்து செய்தது 2007ம் வருடம் எனக்கு தெரியும் என்றாலும் அதுகுறித்து நான் வழக்கு நடத்தியுள்ளேன் என்றாலும் தற்போது நான் நீதிமன்றத்தில் பொய்யாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல. நான் தொடுத்த கேசி கார்டன் வழக்கு நிலுவையில் இருக்கும்போதே என் மகனுக்கு கேசி கார்டன் சொத்தை செட்டில்மெண்ட் செய்தேன் என்றால் சரிதான். மேற்படி கேசி கார்டன் சொத்தின் செட்டில்மெண்ட் ஆவணத்தை ரத்து செய்தபிறகு அந்த வீட்டில் என் தந்தையை துரத்திவிட்டு அத்துமீறி நுழைந்ததாக என் பேரில் குற்றவியல் வழக்கு நிலுவையில் உள்ளது என்றால் சரிதான். நான் கேட்டினமல்லி சொத்துக்களை என் தந்தை, நான், என் தங்கை அன்புச்செல்வி சேர்ந்து 2004 முதல் 2006 வருடத்திற்குள் விற்றுள்ளோம் என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதில் விற்பனை தொகையில் பங்கு எனக்கு தரவில்லை என்று கூறியுள்ளேன் என்றால் சரிதான். அதுகுறித்து வழக்கறிஞர் அறிவிப்பு என் தந்தைக்கோ அல்லது என் தங்கைக்கோ அனுப்பினேனா என்றால் அப்போது எனக்கு தெரியாது. கேட்டினமல்லி சொத்துக்களை விற்ற தொகையில் என் தந்தை வேறு ஏதாவது சொத்து வாங்கிக்கொடுத்தாரா என்றால் இல்லை. மாதவரம், விநாயகபுரம் கிராமத்தில் என் பேரில் 22.07.1996 ல் ஒரு சொத்து வாங்கப்பட்டுள்ளது என்றால் என் தந்தை எனக்கு ரூ.50,000/- கொடுத்தார், அதில் நான் வாங்கினேன். மேற்படி சொத்து என் பேரில் தான் உள்ளது. அதை என் தந்தையே விற்றுவிட்டார். மேற்படி ஆவணத்தில் கிரைய தொகை முழுவதையும் என் தந்தையாரிடமிருந்து பெறப்பட்டது என்று குறிப்பிடப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது.**22.07.1996 தேதியிட்ட ஆவணத்தின்சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.1**

**ஆக குறியீடு செய்யப்படுகிறது.** ரேவதி என்பவர் எனது மனைவி ஆவார். 21.11.2006 அன்று கேட்டினமல்லி கிராமத்தில் 2.9 ஏக்கர் நிலத்தை நான், என் தந்தை மற்றும் முத்துராஜ் வகையறா சேர்ந்து என் மனைவிக்கு கிரையம் கொடுத்துள்ளோம் என்றால் 120 சென்ட் நிலத்தில் அனுபவத்தில் இருந்தோம், என் தந்தை 2.9 ஏக்கர் நிலத்தை வாங்கி 120 சென்ட் நிலத்துடன் சேர்த்து மொத்தமாக விற்றுவிட்டார். **21.11.2006 தேதியிட்ட ஆவணத்தின் சான்றிட்ட நகல் பி.வா.த.சா.ஆ.2 ஆக குறியீடு செய்யப்படுகிறது.** அப்போது என்னை கையெழுத்து போடச்சொன்னார்கள் போட்டேன், நான் பணம் எதுவும் வாங்கவில்லை. மேற்படி சொத்தை ஏன் என் மனைவிக்கு பெயரில் வாங்கினேன் என்றால் அனைத்து ஏற்பாட்டையும் என் தந்தை தான் செய்தார். நான் எதுவும் செய்யவில்லை. என் பேரில் ஐயப்பா நகரில் 12.07.2007 ல் என் தந்தை ஒரு சொத்து வாங்கினார் என்றால் என் மனைவியின் நகையை விற்று நான் வாங்கிய சொத்து ஆகும். 12.07.2007 தேதியிட்ட ஆவணத்தில் எனது தாயார் குமுதம்மாள் சொத்தை விற்று வந்த தொகையில் எனது பாகமாக வாங்கிக்கொடுத்ததாக கூறப்பட்டுள்ளது என்றால் எனக்கு தெரியாது. என் மனைவியின் பெயரில் எழுதிக்கொடுத்த சொத்தை 22.01.2007 அன்று என் மனைவியும் என் தங்கை அன்புச்செல்வி சேர்ந்து அஜித்ராஜ் கங்காரியா என்பவருக்கு விற்றுவிட்டார்கள் என்றால் சரிதான். 22.01.2007 ஆவணத்தில் 2.9 ஏக்கர் நிலத்தை ரூ.1,35,000/- த்திற்கு விற்றுள்ளார்கள் என்றால் ஒரு சென்ட் நிலத்தை ரூ.20,000/- க்கு விற்றார்கள். அஜித்ராஜ் கங்காரியா ரூ,1,17,560/- த்தை என் மனைவியின் பெயரில் டிடி கொடுத்துள்ளார் என்றால் அதை என் தந்தை வாங்கியுள்ளார். நாங்கள் கூட்டுக்குடும்பமாக இருந்தோம்.

**குறுக்கு விசாரணை பகுதி முடிந்த நேரம் 15.50 மணி**

**(குறுக்கு விசாரணை தொடர்ச்சி வேறொரு தேதிக்கு ஒத்திவைக்கப்படுகிறது).**

Typed to my dictation and correction
by me in open court read over to the
witness and admitted by him as correct

Sd/- J.Juliet Pushpa
Principal District and Sessions Judge,
Tiruvallur.